**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.71/2022**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : தனபால் | ஜாதி | : -- |
| வயது | : 56 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : தனியார் நிறுவனம் (MRF) | வட்டம் | : திருத்தணி |

**02.12.2025**
**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது முனியம்மாள் பெயரில் உள்ள பட்டா **பி.வா.சா.ஆ 1** ஆகவும் கோவிந்தசாமி மனைவி முனியம்மாள் பெயரில் உள்ள பட்டா **பி.வா.சா.ஆ 2** ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. 07.08.2023ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்று தாக்கல் செய்கிறேன். **(சான்று பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கிராம நிர்வாக அலுவலர் சான்றிட்ட வழக்கு சொத்திற்கான புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1433ம் பசலிக்கான அடங்கல் கணக்கு கிராம நிர்வாக அலுவலர் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான அ பதிவேடு கிராம நிர்வாக அலுவலர் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அ பதிவேடு பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)